
உ



இவை வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட

# அமரர் சேதுப்பிள்ளை தருமராசா

அவர்களின்

# நினைவு மலர்

29.07.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் சேதுப்பிள்ளை தருமராசா

தோற்றம்
09.12.1932

மறைவு
28.06.2003

## திதி வெண்பா

ஆண்டு சுபானுவமை ஆனி அபரபக்கம்
ஈண்டு சதுர்த்தசியே எம்மன்பு - பூண்டவராம்
சேதுப்பிள் ளைத்திருவே செங்கையன லேந்துசிவன்
பாதப்பே றேற்றார் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால் வாய்
ஆனை முகனைப்பரவி அஞ்சலி செய் கிற்பாம்.

## தேவாரம்

நிலைபெறுமா றெண்ணுதியே நெஞ்சே நீ வா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே.

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல் வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விழம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்றதில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தில்
வந்த பேரின்ப வெள்ளத்தில் நிறைந்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிகண்டி கந்தவன முருகன்

உருகும் அடியார் உணர்வை எதிர்கொண் டுதவுபவன்
இருகை தொழுவார் இதயம் நிறைய இறைப்பவனுன்
தருகை தமையே இரந்து பணிந்த அடியவளை
வரமென் றடியே அணைய வழிதான் வகுத்திடுமே.

பொங்குங் கடலின் திரைகள் தவழ்ந்து பணிந்திடவும்
அங்குன் னடியார் அடியே பணிந்து அருள்பெறவும்
எங்கள் முருகா இனிதே அவரை அனுதினமும்
இங்கென் அயலே அமரென் றழைப்பா யினிதருளே.

சந்த மிசைந்த திருப்புகழ் பாடிடு மின்னடியார்
உந்த னருகில் அமர்ந்தே இசைக்க இரங்கிடுவாய்
வந்து வணங்கி வியனடி வாழ்த்திய ஏழைக்கருள்
தந்து புரக்குதி சண்முக பாதம் தொழுதனளே.

## தொண்டமனாறு செல்வச் சன்னிதி முருகன்

வள்ளிக் குறத்தி வனத்திடை வந்ததைக் கண்டுவந்து
கொள்ளக் கருதினை தேன்தினை மாவுண்டு கொண்டவனே
உள்ளம் களித்தே உனதடி போற்றிய உன்னடியாள்
அள்ளி மகிழ அடியிணை காட்டி அருளுதியே.

நாறும் மலருண்டு நாற்றிசை யும்பணி தொண்டருண்டு
ஆறும் கரையுண்டு அள்ளி இடுகிற அன்னமுண்டு
நீறு புனையெழில் நெஞ்சங்க ளாயிரம் நேர்தலுண்டு
வீறு மலிபதி சன்னிதி யாயருள் வைக்குதியே.

காதல் களவியல் காட்டிட வோதெய்வ யானையுடன்
ஓதும் வனத்தினன் வள்ளியை ஏற்று உயர்ந்து நின்றாய்
தீதிவ் வுலகத் துறவென நீக்கித் திருவழகுப்
பாதம் பணிகிறே னாளுக சன்னிதிப் பேரிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாத்தானை வீரபத்திரர்

உற்றதொரு துன்பமெனில் உன்னருகே ஓடிவந்து
பற்றழித்து நின்னடியைப் பற்றுகிறபற்றளித்தே
மாறாத பேரின்பம் மண்ணில் வழங்குவை நீ
நீறாகும் வரைபொறுத்தே ஆள்.

உண்ட தொருபொழுதாம் நின்னடியே போற்றியின்பம்
கண்ட பொழுதோ கணக்கில்லை - ஆண்டமுமே
காணரிய வீரபத்ர கைதொழுது வேண்டுகிறேன்
மாணடியைக் காணுமருள் தா.

பாடினேன் பாடிப் பணிந்தேன் பலபொழுது
தேடினேன் தேடித் திருப்தியுற்றேன் - வாடுகிற
புன்னுடலை நீக்கி புகலரிய பல தாமுனது
பொன்னடியே சேரவருள் தா.

## பொலிகண்டி நாகேஸ்வரி அம்மன்

அம்மனே உன்தன் தோற்றம் அகந்தையை ஒடுக்கக் கண்டேன்
உம்மருங் கோயில் சேர உறுவினை ஓடிப் போகும்
எம்வினை தீர்த்தே ஆளும் எழில்வளர் தாயே பெற்ற
அம்மையுன் பாதம் சேர அருளளித் தாளு வாயே.

அருளளித் தடியார் துன்பம் அகற்றிய இன்ப வாழ்வு
பெருகிடக் கண்டு நாளும் பொழிகிறாய் கருணை என்றால்
பரிவிதைக் கூற லாமோ பீடுநா கேஸ்வ ரித்தாய்
திருவடி காட்டி ஆள்க இணைகரம் குவிக்கி றேனே.

அடியிணை அருகே வந்தே அழகிய மலர்கள் தூவி
மிடிபடர் துன்ப வாழ்வு விலக்கிட வேண்டும் போதே
இடரழிந் தின்பம் கண்ட இனிமையை எண்ணு கின்றேன்
துடியிடை யவளே நாகேஸ் வரியம்மை ஏற்றாள் வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவரையாளி கண்ணகை அம்மன்

சொல்லுநவ ராத்திரிகள் தாயேயுன் கோயிலிலே
கல்லிதயம் பாகாய் கரையநின்று - எல்லையிலாத்
துன்பம் தொலைந்த சுகம்பெற்று நின்றேனே
இன்பஅடிப் பேறுதனை ஈ.

பொங்கலிட்டுப் பூரித்துப் போற்றி அருகிருக்க
அங்கருளை ஈந்தே உவந்தாயே - இங்கினியும்
வாழும் நினைப்பில்லை வன்னஅடி சார
தாளின் உறவதனைத் தா.

கண்டதொரு நோயென்றால் நேர்ந்துபணம் தூக்கியதும்
கொண்டசுகம் கோடியெனக் கூறுவேன் - அண்டர்தொழும்
கண்ணகியே பல்கலையும் காட்டி அருள்பவளே
விண்ணிலடிப் பேறதனை வை.

## வல்லிபுர ஆழ்வார்

அஞ்சுதலை நாகத் தணைமே லிருந்தடியார்
அஞ்சுதலைப் போக்கி அருளியும் - மஞ்சுநிகர்
வண்ணனே கைதொழுதேன் வந்தென்னை ஆண்டருள்க
கண்ணனே காப்பாய் கனிந்து.

நாமமுனக் காயிரமாம் ஆனாலும் நெற்றியிலே
நாமமது இட்டிடவே நன்மையுறும் - காமமது
வேண்டாமே வைகுந்தம் காட்டி அருளுதியோ
ஆண்டருள வேண்டும் அணைத்து.

கடலாடு தீர்த்தமது கண்டுமனம் களித்து
உடனாட ஓடி வருவோம் - கொடுநாக
நஞ்சுருவக் கண்ணா நமதிடர்நீ தீர்ப்பாய்
கெஞ்சினமே பாதமலர் கண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உல்லியனொல்லை அம்பாள்

பொங்கல் வைத்துப் பூரித்து புலன்களொடுங்கி நிற்கின்றோம்
எங்கும் மக்கள் சூழஎழில் சப்பற மேற்றிக் களிக்கின்றோம்
இங்கித மேளம் நாதமழை என்னக் கண்டு புளகித்தோம்
எங்களின் இதயம் நின்னடிக்கே ஈவா யருளை இப்போதே

பொங்கல் பூசை விழா என்றால் பிறிது எண்ணம் எமக்கேது
தங்க வடிவ அம்பாளே சகலமும் நீயே நாமறிவோம்
சங்கம் இசைப்ப மணியொலிக்க தாயே வந்தா லருளாட்சி
எங்கும் விளங்கும் படியாகும் எங்கள் தாயே காத்திடுக.

உற்ற துன்பம் உன்னடியில் வந்த போதே ஓடிவிடும்
பெற்ற செல்வம் நீதந்த பூரிப் பாலே மகிழுகிறோம்
பற்று நீக்கி மலரடியே சாரும் எண்ணம் ஆனதனால்
சற்றும் தாமத மில்லையம்மா தாள்சேர் அருளே தருவாயே.

## வாழ்க்கை வரலாறு

சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட ஈழமணித் திரு நாட்டின் மணிமுடியாய்க் திகழ்வது யாழ்ப்பாணம் என்னும் பெரும் பதி. இப்புண்ணிய பூமியின் வளம்பல கொழிக்கும் வேளாண்பதி வடமராட்சி ஆகும். அவ்வடமராட்சியின் கண்ணே சைவமும் வேளாண்மையும், தான தர்மங்களும் மேலோங்கிய பெரும்பதியே வதிரியம்பதியாகும்.

வதிரியம்பதியிலே உயர் சைவவேளாண்குலத்திலே தோன்றி இல்லறத்தில் நல்லறம் கண்டு, பலராலும் போற்றப்பட்டுப் பெருவாழ்வு வாழ்ந்தவர் கதிர்காமத்தம்பி, கதிர்காமத்தம்பியும் அவர்தம் மனைவி தெய்வானைப் பிள்ளையும் அவர்கள் செய்த மாதவத்தின் பேறாகச் சேதுப்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, பஞ்சமணி, செல்வமணி, சிவசோதி என நாமம் கொண்ட ஐந்து குழந்தைச் செல்வங்களைப் பெற்றனர். அவர்களில் அமரர் சேதுப்பிள்ளை அவர்கள் மூத்த மகளாக உதித்தவர் ஆவார்.

பெற்றோர் பிள்ளைகளைப் பேணிக்காத்து நாளொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளாத்தனர். அவர்களில் மூத்தமகளான சேதுப்பிள்ளையை உரிய வயதிற் கல்வி கற்க வைத்தனர். அமரர் சேதுப்பிள்ளை அவர்கள் கதிர்காமத்தம்பி தம்பதியினரின் அருந்தவத்தால் 1932.12.09 இல் இப்பூமிதனில் உதயமானார். தமது மகளைப் பெற்றோர் பூரணசந்திரன் போன்று பொலிவோடு வளர்த்தனர். பாராட்டிச் சீராட்டி மகிழ்ந்தனர். ஐந்து வயது வரை அன்னை மடியிலும், தந்தை மார்பிலும் அவர் அகமகிழ்ந்து வளர்ந்தார். பள்ளிப்பருவமடைந்த வேளை அரசடி என்று அழைக்கப்படும் யா/ நெல்லியடி மெ. மி. த. க பாடசாலையில் தன் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் செல்லையா பாடசாலை என அழைக்கப்படும் யா/ வடமராட்சி ஆங்கிலக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார்.

அறம் இனிது வளர இல்லறம் இன்றியமையாதது என்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். இதன் வழி பொலிகண்டி வாழ் செல்லையா வள்ளிப்பிள்ளையின் ஏக புத்திரனும், மஸ்கெலியா பரமகுரு களஞ்சியம் முகாமையாளரும் ஆகிய திரு. செ. தர்மராசாவை அமரர் சேதுப்பிள்ளை 05.06.1953 இல் தம் இல்லத்துணையாகக் கைப்பிடித்தார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது"

எனனும் வள்ளுவரின் கூற்றுக்கிணங்க இல்லற வாழ்வில் இவர்கள் இணைந்து ஒப்பற்ற பெருவாழ்வு கண்டனர். வாழ்க்கை என்னும் இன்பக் கடலில் ஓடம் செலுத்திய காலத்தே கிருபாகரன், திலகவதி, மனோகரன், பகீரதி, பிரபாகரன் ஆகியோரைப் புத்திரச் செல்வங்களாகப் பெற்றனர். குழந்தைச் செல்வங்களைப் பெரும் பேறாகப் பெற்றுப் பெருமையோடு வாழ்ந்தனர். குழந்தைகளின் வளர்ச்சியில் மட்டுமல்லாது கல்வி வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் உறுதிணையாக இருந்து மேன்மையுற வைத்தனர். அதன் பயனாக கிருபாகரன் மண்வள ஆய்வாளராக நீர்ப்பாசனத் திணைக்களத்திற் கடமையாற்றுகிறார். மற்றைய இரு புதல்வர்களான மனோகரன் ஜேர்மனியிலும், பிரபாகரன் டென்மார்க்கிலும் பணியாற்றுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தே பயிர்செய்தல் வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு இணங்க மகள் திலகவதிக்குப் பொருத்தமான ஒரு மணாளனை அமரர் தேடினார். ஈற்றில் கரவெட்டிப் பகுதியைச்சேர்ந்த வ. செல்வராசாவை மகளுக்கு மணமுடித்து மருமகனாகப் பெற்றார். மருமகனையும் தனது மகன்போன்றே போற்றினார். இவ்வரிசையிலே தனது மகன் கிருபாகரனுக்கு, திக்கத்தைச் சேர்ந்த மஞ்சுளாவை மணமுடித்து வைத்தார். ஜேர்மனியில் வாழும் மனோகரனுக்கு சர்மிளாவையும், டென்மார்க்கில் வாழும் பிரபாகரனுக்கு கமலவாணியையும், வாழ்க்கைத்துணையாக்கி மகிழ்ந்தார். இளையமகள் பகீரதிக்கு லண்டனில் வாழும் அம்பிகைநாயகத்தை வாழ்க்கைத்துணையாக்கி அகமகிழ்ந்தார்.

பிறந்த மண்ணிலே துசீதன், நிரோசன், நளினா, நிசாந்தன், நிலானி ஆகிய பேரப்பிள்ளைகளை அள்ளி அணைத்து முத்தமிட்டு வளர்த்தார். லண்டனில் வாழ்ந்த பேரப்பிள்ளையான பாமினாவைக் கொழும்புக்கு அழைத்து முத்தமிட்டு அகமகிழ்ந்தார். டென்மார்க்கில் வாழ்ந்த பேரப்பிள்ளைகளான சாதனா, கவிதரன் ஆகியோரை அள்ளி அணைக்கும் வாய்ப்பு அவருக்கு ஏற்படவில்லையென ஏங்கினார்.

தருமம் தலைகாக்கும் என்ற நெறிப்பாட்டைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த அமரர் சேதுப்பிள்ளை இல்லறத்தோரை இனிது நடாத்தி, அல்லலுற்றார்க்கு அரும் பொருளுதவி, உலக வாழ்வில் தன்கடன் நிறைவேற்றித் தனது 71 ஆவது அகவையில் 2003 ஆம் ஆண்டு ஆனி மாதம் 28 ஆம் நாளிலே மக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார் சோகத்திலாழ இறையடி எய்தினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைக.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்- வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயை வெற்றி கொள்வோம்

அ. பொ. செல்லையா

எமது உடல் கோடிக்கணக்கான கலங்களால் ஆனது. கலங்களின் இயல்பு ஒன்று இரண்டாகி, இரண்டு நாலாகிப் பல்கிப்பெருகுவதாகும். கண்ணின் வில்லையைத்தவிர ஏனையஉறுப்புகள் யாவும் விலங்குகளில் ஒரு குறிப்பிட்ட காலம்வரை வளர்ந்துகொண்டே இருக்கின்றன. அந்த வளர்ச்சிக்குக் காரணம் கலங்கள் பெருகுவதாகும். சில வேளை, வளர்ச்சிக்கன்றி இழந்த கலங்களை, இறந்த கலங்களை ஈடுசெய்வதற்கு, மற்றும் காயம் ஏற்பட்ட வேளை தசையில் ஏற்பட்ட பழுது நீங்கும்வரை விரைவில் பல்கிப் பழுதுநீக்கிய பின்னர் முன் போலவே பெருகும்.

சிலருடைய உடம்பில் திடீரென்று உயிரணுக்கள் இந்தக் கட்டுப்பாடின்றிப் பல்கத்தொடங்கும். இவற்றால் தசையோ, எலும்போ உண்டாவதில்லை, இவ்வாறு நடப்பதால் உடம்புக்கு எவ்விதபயனும் ஏற்படுவதில்லை, இவை வெகுவிரைவில் பல்கி, ஒரு பயனற்ற கழலையாக (Tumour) மாறும்.

சில கழலைகள் தாம் தோன்றிய இடத்திலேயே இருக்கும். அவை பெரிதாக வளர்ந்து பிற உறுப்புக்களை அழுத்தியபோதிலும் தீங்கு செய்வதில்லை. அதனால் அவற்றைக் கொடுமையற்ற கழலைகள் (Benignt) எனக் கூறுவர்.

சில கழலைகள் தோன்றிய உறுப்புக்குத் தீமை விளைவிப்பதுடன் பிற உறுப்புகளுக்கும் பரவி, அங்கும் புதிதாகக் கழலைகள் தோன்றச்செய்து தீமை விளைவிக்கும், இவற்றைக் கொடுமையான கழலைகள் (Malignant) அல்லது புற்றுக்கள் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டுவகைக் கழலைகளில் எது ஏற்பட்டாலும் ஆரம்பத்திலேயே கழலையை அறுத்து நீக்கிவிடலாம் அல்லது X- கதிர் அல்லது ரேடியம் மூலம் சிகிச்சையளித்துக் குணப்படுத்தலாம்.

ஆனால் கொடுமையான கழலையாகிய புற்று என்பது உடலில் உயிருக்கு அவசியமில்லாத உறுப்பில் உண்டாகுமாயினும், சிகிச்சை செய்யாவிடின் உயிருக்கு அவசியமான உறுப்புகளுக்கும் பரவி உயிருக்கு உலை வைத்துவிடும். கொடுமையான கழலையும் கொடுமையற்றது போலவே முதலில் ஓர் இடத்திலேயே வளருகின்றது. அதனால் காலத்தில் சிகிச்சைசெய்தால் அதனை நீக்கிக் குணப்படுத்தி விடலாம் என்பதை நினைவில் வைத்தல் இன்றியமையாததாகும்.

புற்று உண்டாகும் காரணம் இன்னும் தெளிவாகத்தெரியவில்லை. விஞ்ஞானிகள் இன்றும் ஆராய்கின்றனர். சிலருக்கு வருகின்றது. சிலருக்கு உண்டாகவில்லை. ஏன் என்பது தெரியவில்லை!? இது ஒரு தொற்றுநோயல்ல. இதற்கு எதுவிதக் கிருமியோ வைரசோ காரணமன்று பரம்பரை நோயுமன்று.

இந்நோய் உண்டாகச் சரியான காரணம் தெரியாதிருந்தபோதிலும் அதைப்பற்றிச் சில அனுமானிக்கப்பட்டுள்ளன. இந்த நோய் பெரும்பாலும் வயதானவர்களுக்கே வருகின்றன. அது இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் வராதென்பதல்ல வந்துள்ளது.

உடம்பில் இரசாயனச் செயல் மிகுதியாக நடைபெறும் வயிறு, பெண்ணின் பிறப்புறுப்புப்போன்ற இடங்களிலேயே மிகுதியாகத் தோன்றுகின்றது. உறுப்புகளின் சில பகுதிகளில் ஏதேனும் உராய்தலோ அல்லது உறுத்தலோ ஏற்பட்டால் அந்தப் பகுதிகளில் புற்றுநோய் உண்டாகலாம் என்று தெரிகிறது. பெண்ணின் முலை உதாரணமாகும். பெண்களின் மார்புப் புற்றுநோய் அதிகளவில் உள்ளது. சிலருக்கு சொக்கில் - கையில் - மேற்பாதத்தில் எல்லாம் இந்நோய் வந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைக்கரி (Soot), தார்ப்பொருள்கள், கதிரியக்கப்பொருள்கள், (Radio active Materials) போன்ற சில பொருள்கள் புற்றுநோய் வளர்வதற்கு உதவிசெய்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் சில முக்கியமாக நுரையீரலையே தாக்குகின்றன. அவற்றுள் தாது எண்ணெய் ஆவி, குறோமேட்டுத்தூள், கதிரியக்கத்தூள் ரேடியக் கதிர்கள் அடங்கும்.

புற்று நோயாளர்களில் பலர் புகை பிடித்தவர்கள் - வெற்றிலை போட்டவர்கள் எனக்கண்டுள்ளனர். புகையிலையிலுள்ள நிக்கொற்றின் உடலுக்கு நஞ்சாகும். வெற்றிலையுடன் சேர்க்கப்படும் சுண்ணாம்பு வாய் அவியலை உண்டாக்கும். சிலர் புகையிலையையும், வெற்றிலையுடன் சேர்ப்பர். நீண்டநேரம் கொடுப்புக்குள் வெற்றிலை கட்டை வைத்திருப்பர். இவை உடற் சௌக்கியத்திற்குப் பொருந்துவன அல்ல.

மேலும், நாம் நல்லவை என நம்பியவை தீங்கானவையாக மாறலாம் என அண்மைக்கால ஆய்வுகள் கூறுகின்றன. உருளைக்கிழங்கு, தக்காளிகூட புற்றுநோயைக் கொண்டுவரலாம் என்பதாகும். எதனைத் திருப்பித் திருப்பி, மண்டி மண்டி எடுக்கிறோமோ அவை எமக்கு புற்றைத் தருவனவாக அமையலாம். அளவுக்கு அதிகமாகாததால் பாகற்காய் நஞ்சாகவில்லை!

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" அருமையான முதுமொழி! எல்லா இடத்திலும் எல்லாவற்றிற்கும் பொருந்தும். அதில் உணவுக்கு மிகப்பொருத்தம். உணவின் மூலந்தான் தேவையற்ற இரசாயனப் பொருட்களை உடலிற்குள் தள்ளுகிறோம். மாம்பழக்காலம் என்று மாம்பழம் அதிகமாகச் சாப்பிடக்கூடாது. இங்குதான் விரதம் முக்கியமாகிறது. இதில் இவ்வளவுதான் உட்கொள்வேன் என்பதில் இறுக்கமாக இருக்கவேண்டும்! இனிப்பு - இன்சுவை - இன்பம் - இறுக்கமில்லை என்றால் இன்னலுறவேண்டி வரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், புற்றுக்களில் பெரும்பாலானவை காலத்தில் கண்டு சிகிச்சை செய்தால் குணப்படுத்திவிடக்கூடியவை ஆகும்! கருத்தில் இதனைக் கொள்ளவேண்டும். கவனப்படுத்திடவேண்டும்! உரிய காலத்தில் உறுதிசெய்திடல் வேண்டும்! "சோம்பல் மிகக் கெடுதி பாப்பா" - பாரதி புற்று என்பதற்குரிய குறிகளைக் கண்டதும், உடம்பு நலமாகவே தோன்றினும், மருத்துவரிடம் போய்க் காட்ட வேண்டும்.

மருத்துவர் மேலும் பரிசோதனை செய்யவேண்டும். சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்றால் மருத்துவரின் ஆலோசனைப்படி நடக்கவேண்டும். கழலையோ, புண்ணோ மர்ம உறுப்பிலும் இருக்கலாம்! மருத்துவரிடம் சொல்லவோ இடத்தைக் காட்டவோ கூச்சப்படக்கூடாது. காலதாமதம் வேதனையைத் தரலாம்! கழலைகள் பெரும்பாலானவை கொடுமையில்லாதவைகளே. ஆனால் அது புற்றாகவும் ஆகலாம். எனவே, அவற்றை நீக்கிவிடுதலே நல்லது.

புற்றுநோய் சிகிச்சைக்கு முக்கியமான துணைகள் சத்திரசிகிச்சை. X -கதிர், றேடியம் என்பன. நோய் பரவத்தொடங்காதிருந்து நீக்க முடியுமாயின் சத்திரசிகிச்சையே சிறந்தது. சிலவேளை சத்திரசிகிச்சையுடன் X - கதிர் அல்லது றேடியம் முறையையும் சேர்ப்பதுண்டு. இவை 1960 லேயே நடைமுறையில் இருந்தன. இப்பொழுது, ஊசி மருந்து, அக்குப்பஞ்சர் போன்ற பல முன்னேற்றங்கள் விஞ்ஞான மருத்துவத்துறையில் உள்ளன. கணனித்தொடர்புகள் நுணுக்கமாக ஆராய்கின்றன. Internet மூலம் உலகத்தொடர்பினை உடனுக்குடன் பெறமுடியும்.

பிழையார் எனக்கருதப்பட்ட புற்றுநோயாளிகள் பிழைத்துள்ளனர். பிழைப்பார் எனப்பட்டவர்கள் பிழைத்திடவில்லை. இதில் விதி சாத்திரம் என ஒன்றுமில்லை. "சாத்திரந்தனை இகழ்" செத்த பிறகு சிவலோகம் வைகுண்டம் என்றிருப்பர் பித்த மனிதர் என அறைந்தான் பாரதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைக்கவில்லை என்றால் அதற்குரிய காரணங்களை அறிந்திட முயற்சிக்கவேண்டும். இன்றைய கண்டுபிடிப்பு நாளைய சிகிச்சைக்கு மருந்தாகும்! பாரதியின் கனவுகளை நனவாக்கிட, நோய்களைப்பற்றிய விழிப்புணர்வுகளை நாம் கொண்டாடிட நலவியல் பேணவேண்டும். வானமளவுக்கு கோபுரம்! ஆனால், பாதாள மளவுக்கு அறியாமை! இருக்கலாமா? மேலைக்கலைச்செல்வங்கள் எல்லாம் இங்கு கொண்டுவரவேண்டும். (பாரதி). சாறிக்குப் பதில் சட்டையல்ல. சுட்டாறிய நீருக்குப் பதில் சாராயமல்ல மேலைக்கலைச்செல்வம்! விஞ்ஞானச் சிந்தனை - விஞ்ஞான அணுகு முறையாக நமது செயல்கள் மாறவேண்டும். அப்பொழுதுதான், புற்றுநோயை மட்டுமல்ல ஏனைய கொடிய வியாதிகளிலிருந்தும் விடுபட்டு நாம் வாழ முடியும். மேலும், நோய் முற்றியவர்கள் இதமாய்க் காலங்கழிக்குமாறும் செய்துவரப்படுகிறது. ஓர்மோன்கள் பற்றிய அறிவு மிகுந்து வருவதால் அவை புற்றுநோயைக் குணமாக்க வேறு கருவிகளாக அமைகின்றன.

## புற்றுநோய்க்குரிய குறிகளாவன:

1. உடம்பில் எந்த இடத்திலேனும் கட்டி தோன்றுதல்
2. விட்டுவிட்டு இரத்தம் வடிதல்
3. விடாத அசீரணம்
4. மலப்போக்கில் காரணம் கூறமுடியாத மாறுதல்கள்
5. காரணம் கூறமுடியாத விதத்தில் உடம்பின் நிறைகுறைதல்
6. மரு இருந்தால் அதன் நிறமோ அளவோ மாறுதல்
7. விரைவில் ஆறாதபுண் தோன்றுதல்.

இவற்றை விடவும் இவைபோன்ற வேறு சிலவும் தோன்றலாம். இவற்றில் ஏதாவது ஒன்றை இனங்கண்டால் மருத்துவரிடம் செல்ல வேண்டும். நோய் பற்றிய முடிவை வைத்தியர்தான் எடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்தான் நோயைக் குணப்படுத்த முடியும். ஆலோசனைகள் யாவும் யாரும் வழங்கலாம். முடிவு மருத்துவருடையதாகும்.

காலத்தால் செய்த உதவி ஞாலத்திலும் பார்க்கப் பெரிதாவது போல, காலத்தால் கண்டு கவனமாக மருத்துவம் செய்தால் களிப்புற்று வாழலாம் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். வருமுன் காக்க வேண்டும். பரிகாரத்தைவிட விழிப்புணர்வு பெரிதாகும்.

மக்கள் பணியே மகேசுரபூசை எனக்கொண்டு, மக்கள் ஆரோக்கியத்தில் விழிப்படைய ஆவனசெய்து, நொய்த மனத்தினை மகிழ்விக்க ஏழையின் வாழ்வில் இன்பம் மலர உழைத்து, புற்றுநோயை வெற்றிகொள்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்ஸ் ~ SARS

எயிட்ஸ் எனும் பாரிய நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முழு விஞ்ஞான உலகமும் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையிலே இன்று புதிதாய் உருவெடுத்திருக்கும் ஓர் வைரஸ் தொற்று நோயை "சார்ஸ்" - SARS என அடையாளப் படுத்தியிருக்கிறார்கள்.

மருத்துவத்துறையினருக்கே பெரும் சவாலாக உருவெடுத்திருக்கும் இந்நோய் எண்ணிக்கையான உயிர்களைப் பலிகொண்டுள்ளது. இவ்வகையில் எல்லோர் மனங்களிலும் காணப்படும் "சார்ஸ்" பற்றிய சந்தேகங்களை ஆராய்வோமாயின்.

1. "சார்ஸ்" எனப்படுவது (SEVERE ACUTERES PIRATORY SYNDROME) என்பதன் சுருக்கமாகும். இது ஒரு சுவாசத்தொற்று நோயாகும்.

2. இந்நோய்க்கான அறிகுறிகளாகப் பின்வருவன இனங்காணப்பட்டுள்ளன.

இந்நோய் கடுமையான காய்ச்சலுடன் ஆரம்பித்து தலை வலி, குளிர், அலுப்பு, செல்லச் செல்ல வறட்டு இருமல், மூக்கடைப்பு, தொடர்ச்சியான தும்மல் மூச்சுவிடுதலில் சிரமம் அதிகரிக்கும் நெஞ்சு நோவு ஆகிய அறிகுறிகளை வெளிப்படுத்தும்.

3. "சார்ஸ்" நோய்க்கான காரணியாக வைரசுக் குடும்பத்தின் ஒரு அங்கமான குறோணோ வைரசு மூலமாகவே ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவை சாதாரண தடிமனை உருவாக்குபவை ஆயினும் நுரையீரலில் ஏற்படும் தொற்று காரணமாகவும் குருதி விநியோகம் தடைப்படுவதனாலும் இதனால் சுற்றுப்பரிமாற்றம் தடைப்படுவதனாலும் இந்நோய் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தும்மும்போதோ அல்லது இருமும் போதோ வளியில் விடப்படும் துணிக்கைகளை இன்னொருவர் உள்ளெடுப்பதால் இந்நோய் பரவுகிறது. அத்துடன் "சார்ஸ்" நோய்க்கான வைரசின் எண்ணிக்கையில் பெருமளவு தொற்று ஏற்பட்டாலே "சார்ஸ்" உருவாகும்.
ஆனால் வீரியத்தைப் பொறுத்தவரை ஏனைய வைரசுகளுடன் ஒப்டும்போது மிகவும் பயங்கரமானது.

5. இதற்கான சிகிச்சை முறைகள் பற்றிச் சிந்திக்கும்போது இதற்கான தகுந்த மருந்துகள் எவையும் கண்டறியப்படவில்லை நுண்ணுயிர் கொல்லிகள் எவையும் பயனளிப்பனவாகவும் இல்லை. அதனால் வைரசு கொல்லிகளோ பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

6. இந்நோய் பரவுவதைத் தடுப்பது பற்றிச் சிந்திக்குமிடத்து இங்கு நோயாளி தனிமைப்படுத்தப்படவேண்டியவராகிறார். இந்நோயாளி தும்மும்போது அல்லது இருமும்போது மூக்கு, வாய் முதலியவற்றை ஒரு கைக்குட்டையால் அல்லது முகமூடியினால் மூடிக்கொளவதன் மூலம் கிருமிகள் காற்றிற் பரவுவதைத் தடுக்க முடியும்.

இந்நோயாளியைப் பராமரிப்போர் கையுறைகளை அணிவதோடு மிகவும் கட்டுப்பாடாக இருத்தல் வேண்டும். இந்நோயாளி பயன்படுத்தும் பொருட்கள், கழிப்பறைகள் தொற்று நீக்கிகள் மூலம் தொற்று நீக்கப்படல் அவசியமாகின்றது.

இந்நோயைப்பற்றி இன்னும் முழுமையான தகவல்கள் கண்டறியப்படாத நிலையில் யாழ்ப்பாண நகரிலும் இந்நோய் பற்றிய பெரும்பீதி அண்மைக் காலமாக நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நோய்க்கான அறிகுறிகளுடன் நோயாளியொருவர் சில நாட்களுக்கு முன்னர் கண்டறியப்பட்டமை இதற்கான காரணமாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இன்நோய் பறிறி முழுமையான ஆராய்ச்சித் தகவல்கள் எதுவும் வெளியிடப்படாத நிலையிலும் இந் நோயிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கான வழிகள் பற்றிய அறிவுறுத்தல்கள் சரியாக வெளியிடப்படாத நிலையிலும் இந்நோய்த் தாக்கத்தால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் பல நாடுகள் நாளாந்தம் உயிரிழப்புகளைச் சந்தித்த வண்ணமுள்ளன.

பல வசதி படைத்த நாடுகளே இந் நோயின் பிடியினால் திணறிக்கொண்டிருக்கும் பொழுது இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இவற்றின் தாக்கம் ஏற்படுமானால் எமது மக்கள் எப்படி இந் நோயினை எதிர் கொள்ளப்போகிறார்கள் என்பதுதான் இன்று அனைவர் மனதிலும் தோன்றியுள்ள கேள்வியாகும்.

## நெருப்புக்காச்சல்
## (Typhoid Fever)

யாழ் குடாநாட்டின் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளில் மலேரியா நோயாளரும் நெருப்புக்காய்ச்சல் எனப்படும் தைபொயிட் நோயினால் பீடிக்கப்பட்டோருமே மிகப் பெருந்தொகையினராவர். மலேரியா போன்ற நெருப்புக்காய்ச்சலும் குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதிகளில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நெருப்புக் காய்ச்சல் முற்றிலும் தவிர்க்கக்கூடிய ஒரு நோயாகும். எனினும் இந்நோய் பற்றிய பூரண அறிவின்மையால் வருடாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுவதுடன் பல மரணங்களும் சம்பவித்துள்ளன. மேலும் ஒரு முறை நோய்வாய்ப்பட்டு குணமடைந்து சென்றவர்கள் கூட அவதானமின்றி இருந்து மீண்டும் மீண்டும் இதே நோயினால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரி அனுமதி பெறும் பரிதாப நிலையும் காணக்கூடியதாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்க்கிருமி

Salmonella typhi, Salmonella Paratyphi எனும் இருவகை பக்டீரியா நுண்கிருமிகளால் நெருப்பு காய்ச்சல் தோற்றுவிக்கப்படும். மனிதனில் மட்டும் இந்நோய் ஏற்படும் நீர்நிலை வசதிகள் குறைந்த பகுதிகளிலும் பருவமழை காலங்களிலும் நோய்கிருமி தொற்று அதிகரிக்கின்றது.

## நோய் எவ்வாறு தொற்றுகின்றது

நோயாளியின் மலத்திலும், சலத்திலும் நோயிலிருந்து குணமான பின்பு சில காலத்திற்கு நோய்க் கிருமியை மலத்தில் கொண்டிருப்போரான நோய்க் காவிகளானவர்களின் மலசலத்திலம் பற்றீரியா காணப்படும். இது பின்வரும் ஏதேனும் வழியில் சுகதேகியை தொற்றிக் கொள்ளலாம்.

(1) நோயாளியின் மலத்தில் உட்கார்ந்த இலையான்கள் பின்னர் கடைகளிலும், வீடுகளிலும் திறந்து வைத்த உணவுபதார்த்தங்களின் மீது உட்கார்ந்து தமது கால்கள் மயிர்கள் முதலியவற்றை சுத்திகரிக்கும் போது கிருமிகள் உணவை அடைந்து அவ்வுணவு உட்கொள்ளப்படும் போது சுகதேகியின் குடலை அடைந்து நோய் தொற்றலாம்.

(2) நோயாளி அல்லது காவி மலங்கழித்தபின் கைகளை சரியாகக் கழுவாமல் சுகதேகிகளான மற்றவர்கள் உண்ணும் உணவுகளை கையாறும் போது.

உதாரணமாக: கடைகளிலும் வீடுகளிலும் உணவு தயாரிப்போரும் பரிமாறுவோரும் இவ்வாறு நோயுற்றிருப்பின் அவர்கள் மலங்கழித்த பின் கைகழுவது வழமையான உணவு கையாளும் வேலைகளை செய்யும் போது

(3) மலசல கூடங்களில் அல்லாமல் வெளியில் மலங்கழித்தல் மூலமாக பரவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளியின் மலத்திலுள்ள பற்றீரியாக்கள் மழைக்காலங்களில் மழை நீருடன் அடித்துச் செல்லப்பட்டு குடிநீர் நிலைகளை அசுத்தமாக்கலாம்.

நோயாளி மண்ணில் மலங்கழித்தால் அது மண்ணோடு மண்ணாக காணப்பட்டு பின் அந்த மண்ணில் குழந்தைகள் அளைந்து விளையாடினால் விளையாடிய பின் கைகளை சரியாக கழுவாமல் அந்தக்கையுடன் சாப்பிடும் போது பற்றீரியா குடலை சென்றடையும்.

மண்ணில் கழிக்கப்பட்ட மலம் மூலம் இலைக்கறிவகைப் பயிர்களில் மலத்தோடு மலமாககிருமி ஒட்டி இருக்கும். இந்த இலைக்கறி சரியாக கழுவப்படாமல் பச்சையாக உணவாக உட்கொள்ள படின்.

(4) குடிநீர் நிலைகளில் அல்லது அவற்றின் அருகில் மலங்கழித்தலோ அல்லது அங்கு மலங்கழுவச் செல்லுமிடத்து அல்லது நோயாளிகளின் துணிகளை குடிநீர் நிலைகளில் துவைக்கும் போது நோய்க்கிருமி குடிநீரை அடைந்து நோயை ஏற்படுத்தும்.

யார் யாரை நெருப்புக்காய்ச்சல் அதிகம் தாக்குகின்றது.
முக்கியமாக பாடசாலை சிறுவர்கள்

இந்தச் சிறார்கள் கடைகளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத "ஜீஸ்" என்னும் பானத்தை மிகவிரும்பிப் பருகுவது யாழ் குடாநாட்டில் நெருப்புக்காய்ச்சலின் பரம்புகை தீவிரமாவதற்கு முக்கிய காரணம் சுகாதார பிரிவினரின் சட்டப்படி இவ்வாறான ஜஸ் கரைப்பதற்கு தரம் வாய்ந்த நீர் (Standard water) பயன்படுத்தப்பட்ட வேண்டும். இதனை யாழ்ப்பாணத்தில் பெறமுடியாத நிலை இருப்பதால் குறைந்த பட்சம் கொதித்தாறிய நீரையேனும் பயன்படுத்தும்படி விற்பனை செய்பவர்களைக் கேட்டுக் கொண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாப நோக்குடைய அவர்கள் அசுத்தமான நீரிலேயே

நா உலர்வு

கை கால் நோவு

இருமல் சளி வராத வரட்டு இருமல்

மலச்சிக்கல் அல்லது சிலவேளை வயிற்றோட்டம்.

**இரண்டாம் வாரத்தில்**

இளஞ்சிவப்பு புள்ளிகள் வயிற்றிலும் மார்பிலும் தோன்றுதல்

இது மூன்று நாட்களில் தானாக மறையும்

வயிற்று நோ

மண்ணீரலும் ஈரலும் வீங்குதல்

வயிறோட்டம்

**மூன்றாம் வாரம்**

நெருப்புக் காய்ச்சலைப் பின்தொடரக் கூடிய பல சிக்கல்கள் அதாவது குருதிச் சோகை, சளிச்சுரம், நரம்பு பாதிப்பு, சிறுநீர் தொகுதித் தொற்று

நெருப்புக்காய்ச்சலுக்கு சரியான பூரண சிகிச்சை பெறாதவிடத்து ஒரு தடவை ஏற்பட்ட வியாதி முற்றி கோமா (ஆழ் மயக்க நிலையும்) நிலையும் தொடர்ந்து மரணமும் சம்பவிக்கும் அரைகுறையாக சிசிச்சை பெற்றோ அன்றி நோயின் பின்பு பூரண ஓய்வு எடாதவிடத்து மீண்டும் நோய் ஒரு வாரம் அல்லது அதற்கு பின் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எவ்வாறு நெருப்புக்காய்ச்சல் நோயைக் தடுப்பது?**

குடிநீரை கொதிக்கவைத்துப் பருகுதல் அசுத்தநீரில் தயாரிக்கக் கூடிய பானம், உணவு விசேடமான ஜீஸ் ஐஸ்கிறீமை தவிர்த்தல்.

மலசல கூடத்தில் மலங்கழித்தல் மலங்கழித்தபின்னும் சாப்பிட முன்பும் குழந்தைகள் மண்விளையாடிய பின்பும் சவர்க்காரமிட்டு கழுவுதல்.

உணவு, பானங்களை மூடி வைத்தல்.
நோயாளியை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது குடும்பத்தின் வழிகாட்டி, நோயுற்றகாலை உதவிபுரிந்தோர், போதனா வைத்தியசாலையில் இறுதிவரை உதவியோர், இறுதிச்சடங்கைச் சிறப்பாக நடாத்துவதற்குப் பல வழிகளிலும் உதவியோர், அதிற் கலந்து கொண்டோர், இரங்கற் செய்திகள் அனுப்பிவைத்தோர், இம்மலரினை உருவாக்க உதவியோருக்கும் இன்று சபீண்டீகரண நிகழ்வில் பங்கு கொண்டு சிறப்பித்த எல்லோருக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்கள். அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

வதிரி,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.
29.07.2003.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- கதிர்காமத்தம்பி + தெய்வானைப்பிள்ளை
  - **சேதுப்பிள்ளை**
  - கதிரவேற்பிள்ளை
  - பஞ்சமணி
  - செல்வமணி
  - சிவசோதி
- செல்லையா + வள்ளிப்பிள்ளை
  - **தர்மராசா**

**சேதுப்பிள்ளை** + **தர்மராசா**

- கிருபாகரன் (கொழும்பு) மண்வளஆய்வாளர் + மஞ்சுளா
- திலகவதி + செல்வராசா + (வலயக்கல்விப்பணிப்பாளர் தென்மராட்சி)
- மனோகரன் (ஜேர்மனி) + சர்மிளா
- பகீரதி (லண்டன்) + அம்பிகைநாயகம்
- பிரபாகரன் (டென்மார்க்) + கமலவாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நனறாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

**தமிழ்ப்பூங்கா (மல்ரி ஒவ்செற்) அச்சகம் – நெல்லியடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org